# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 46வது கூட்டறிக்கை 2021.12.15

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 46வது அமர்வு 2021.12.15 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம்.நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 06. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 10. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 18. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 19. திருமதி.கே.குலமணி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்கள்:**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 46வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்கள் இந்த சபைக்கு சுகவீனம் காரணமாக சமூகமளிக்க முடியாது என்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவருக்கு விடுமுறை வழங்குவதற்கான அனுமதி.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

இவ் அமர்வின் முதல் அம்சமாக சென்ற மாத கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். திருத்தங்கள் இருந்தால் கூறலாம். இல்லாவிட்டால் ஒருவர் ஆமோதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

கூட்டறிக்கை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களே, நமது சட்டபூர்வமான காலத்தின் படி அரசு இந்த மாதம் அல்லது அடுத்த மாதத்தின் ஆரம்பத்தில் இந்த சபைகளின் காலத்தை நீடிக்காவிட்டால் இது நமது இறுதி அமர்வாகவும் இருக்கலாம். 2018 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை ஒற்றுமையாக ஊரின் நலனை கருதி இன, மத, பேதம் இன்றி சம்மாந்துறை மக்கள் வாழ்வதற்கு நாம் உருவாக்கும் வருமானத்தைக் கொண்டு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு நாம் எடுத்த முயற்சிகளும், அதனால் மக்களிடம் இருந்து பெற்ற கருத்துகளுக்கும் உங்கள் எல்லோருக்கும் நன்றி கூறியவனாக,

இனிவரும் காலங்களில் இந்த நாட்டின் தற்போதய நிலமையை கருதும் போது உள்ளூராட்சி சேவை என்பது மிகவும் சவாலுக்கு உட்பட்ட விடயமாக மாறக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றது. திங்கட் கிழமை உள்ளூராட்சி சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட ஒரு நிகழ்வில் நான் நமது உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சின் புது செயலாளர் திரு. வீரசேகர அவர்களை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் முதல் உள்ளூராட்சி ஆணையாளராக இருந்தவர். அவரின் கருத்துப்படியும் உள்ளூராட்சி சபைகளின் காலங்கள் நீடிப்பது என்பது சந்தேகத்திற்குரிய விடயம் என்ற தொனியிலே பேசினார். அப்படியானால் மார்ச் மாதம் தேர்தல் நடக்கலாம். இல்லாவிடில் சென்ற ஆட்சிக் காலம் போல் 2, 3 வருடங்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் இல்லாமலும் சபைகளை நடத்தக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றது. நிதி அமைச்சர் கூறியது போல் அரச சேவை ஒரு சுமை என்பது போல் அரச பிரதிநிதித்துவங்களும் அரசுக்கு நிதிச் சுமையாக கருதப்படலாம். சில வேளைகளில் உள்ளூராட்சி தேர்தல் சட்டத்தில் மாற்றங்கள் வரக்கூடிய சாத்தியங்களும் இருக்கின்றது.

அதற்கு அப்பால் நாம் பெருமைப்பட வேண்டிய ஒரு விடயத்தைப் பற்றி கூற வேண்டும். உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் புதுமையான அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பிரிவில் நமது சபையின் கௌரவ உறுப்பினர் சிஹாமா சியாஸ் அவர்கள் இந்த சபையின் அங்கீகாரத்தோடு முன்னெடுத்த வளம் குறைந்த குழந்தைகளுக்கு ஜப்பானிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கட்டட திட்டத்திற்கு அவருக்கு முதல் பரிசு வழங்கப்பட்டது. அத்தோடு ரூபா 50,000.00 உம் வழங்கப்பட்டது. பெண் உறுப்பினர்களுக்கு அரசினால், அரசற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட பல திட்டங்களில் நமது உறுப்பினர்கள் இந்த சபைக்கு கௌரவத்தை தேடித் தந்திருக்கின்றார்கள். நான் எங்கு சென்றாலும் எல்லா நிறுவனங்களிலும் பேசுவது உங்கள் உறுப்பினர்கள் எப்போதும் உங்கள் சபையைப் பற்றி உயர்த்தியே பேசுகின்றார்கள் என்று, அது நமக்கு கேட்பதற்கு சந்தோசம். அதே போல் இங்குள்ள பெண்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயம் என்னவென்றால் ஆண்கள் 14 பேர் இருந்தும் உங்கள் 06 பேரையும் மிகவும் பக்குவமாகவும், மிகவும் கண்ணியமாகவும் நடத்திய பெருமையும் எங்களுக்கு சேரும் என்பதை நான் கூறவேண்டி இருக்கின்றது.

அடுத்தது கௌரவ நிதி அமைச்சர் அவரின் வரவு செலவுத் திட்ட உரையில் அரச சேவைகளுக்கு புது நியமனங்கள் வழங்கப்படமாட்டாது என்று கூறியது நமக்கு பாரிய சவால். நமது வருமானத்தில் ஏறத்தாள 23% செலவு நிரந்தரமற்ற ஊழியர்களின் சம்பளம். அந்த ஊழியர்கள் இல்லாமல் இந்த சபையை நடத்தவும் முடியாது, அடிப்படை கடமைகளை நடத்தவும் முடியாது. அப்படியான நிலையில் நிதி முகாமைத்துவம் மிகவும் கவனமாக செயற்படுத்தாவிட்டால் இந்த சபையை கொண்டு செல்வது நமக்கு பின் வருபவர்களுக்கு பாரிய சவாலாக அமையும் என்று கூறிக்கொண்டு, இன்றய நிதி நிலவரத்தை நீங்கள் பார்ப்பீர்களானால் நவம்பர் 30 வரை நாம் சபை வருமானமாக ஈட்டிய தொகை 61.5 மில்லியன். அதில் நவம்பர் 30 ஆந் திகதி வரை 58.5 மில்லியன் செலவளித்திருக்கின்றோம். எஞ்சியது 03 மில்லியன். 58 மில்லியனில் ஏறத்தாள 03 மில்லியன் நமக்கு மீண்டும் வரவேண்டிய பணம். அப்படியானால் 06 மில்லியன் எஞ்சிய பணமாக இருக்கும். அதற்கு மேலாக சபையின்

கையிருப்பு என்ற ரீதியில் மொத்தமாக இன்றுவரை 15.8 மில்லியன் இருக்கின்றது. நமது காலத்திற்குள் கொண்டு செல்லக்கூடிய நிதியை கையில் வைத்துதான் செல்கின்றோம் என்ற ஒரு திருப்தி இருக்க வேண்டும். அதற்கு மேலாக நேற்றய தபாலில் நமக்கு ஏறத்தாள 2.5 மில்லியன் முத்திரைக் காசு வந்திருக்கின்றது. சென்ற சபையில் நீங்கள் சபை அங்கத்தவர்களுக்கு ஏதாவது வாழ்வாதார உதவிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று கேட்டிருந்தீர்கள். என்னைப் பொருத்தமட்டில் அதை செய்ய வேண்டும் என்றால் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் ஒரு இலட்சம் பெறுமதியான அவசரமாக செய்யக்கூடிய வேலையை இந்தக் கிழமைக்குள் முன்வைத்து அதை அடுத்த கிழமை நிறைவேற்றி 27 ஆந் திகதிக்கு முதல் கணக்குகள் முடிக்க வேண்டும்.

அடுத்ததாக முக்கியமான இரண்டு விடயங்களில் ஒன்று புதிதாக மின் இணைப்பு எடுப்பதற்குரிய பட்டியல் கேட்கப்பட்டது. அதை ஒரு கௌரவ உறுப்பினர்களும் தரவில்லை. அடுத்தது கிராம சேவகர் பிரிவை பிரித்தல். இதில் நான் ஆரம்பத்திலேயே கூறினேன் அரசாங்கம் இப்படித்தான் நோக்குகின்றது என்று, அதை பெரிதுபடுத்தாமல் பிரதேச செயலகத்தினால் 65 கிராம சேவகர் பிரிவாக பிரித்து அனுப்பினார்கள். Commission இல் இருந்து மீண்டும் அதற்கு கடிதம் வந்திருக்கின்றது. நகரமாக கணிக்கக்கூடிய இடங்களில் நிர்வாக உத்தியோகத்தர்கள் குறைக்கப்பட வேண்டும் என்று சில கிராம சேவகர் பிரிவை ஒன்றாக்கி கொடுத்துவிட்டார்கள். ஆனால் முதல் செய்யவேண்டியது நகர்ப் புரங்களில் கிராம சேவகர் பிரிவு வைக்க முடியாது என்ற பரிந்துரை வழங்கப்பட்டது. இதில் நான் உங்களிடம் பல முறை கேட்டும் நீங்கள் ஒருவரும் அதில் எழுத்து மூலம் முயற்சி எடுத்ததாக இல்லை. ஆனால் நான் உங்களின் கவனத்திற்கு முன்மொழிவு ஒன்று தயாரித்திருக்கின்றேன். சபை என்று அனுப்பப்படும் போது எல்லோரினது கருத்துக்களை உள்வாங்கியதுதான் வலுவானது. நீங்கள் தேவை என்றால் குறிப்பு எடுத்துக் கொள்ளுங்கள்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது கதைத்துவிட்டு செல்கின்ற விடயம் அல்ல. இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயம். ஆகவே எழுத்து மூலம் தந்தால்தான் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது, அதன் எல்லைகளை பார்த்து கருத்துக்களை முன்வைக்க முடியும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களே, நான் உங்களிடம் கூறினேன். இது எனது தனிப்பட்டது. உங்களை ஊக்குவிப்பதற்காக சொல்கின்றேனே தவிர பிரதேச சபை தவிசாளர் என்ற ரீதியில் செய்யவில்லை. என்னுடைய எண்ணம் இப்படி செய்யலாம் என்று இருக்கின்றது. அது நிச்சயமாக சபை என்று அனுப்பப்படும் போது உங்களுடைய முன்மொழிவுகள் சேர்த்தே தயாரிக்கப்படும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தனிப்பட்ட விடயத்தை நாம் இங்கு கலந்துரையாட வேண்டிய அவசியம் இல்லை. உத்தியோகபூர்வமாக சபையால் ஒரு தீர்மானத்தை முன்வைப்பது என்றால் சகல உறுப்பினர்களின் கருத்துக்களை உள்வாங்கித்தான் அந்த ஆவணம் தயாரிக்கப்பட வேண்டும். கருத்துக்களை முன்வைப்பதற்கு எழுத்து மூலம் தந்தால்தான் அதில் என்ன இருக்கு என்பதை பார்க்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எழுத்துமூலம் வழங்க வேண்டியது வழங்கப்பட்டது. அதை நீங்கள் ஒருவரும் செய்யவில்லை. நான் ஒரு அங்கத்தவனாக எனக்கு எட்டியதை நான் செய்து வைத்திருக்கின்றேன். நான் தர வேண்டிய அவசியம் இப்போது இல்லை. அதுதான் கருத்து என்றால் நீங்கள் உங்களது விருப்பப்படி நடக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதை உத்தியோகபூர்வமாக பேசுவதில் எந்தப்பிரச்சினையும் இல்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது நௌசாட்டாக செய்த விடயம். இதை ஆவணமாக தருவதற்கு நான் தயார் இல்லை. ஆனால் நான் உங்களுக்கு முன்மொழிகின்றேன். நீங்கள் அதை ஏற்றுக் கொண்டால் உங்களது முன்மொழிவாக தரலாம். அல்லது அதில் மாற்றங்களை செய்து ஒன்றாக வைக்கும் போது அதை கலந்துரையாடலாம். நான் இதை உங்களது கையில் தந்தவுடனே நீங்கள் தவிசாளர் இப்படித்தான் செய்திருக்கின்றார் என்று வெளியே வரலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் அறிவித்தல் கொடுத்தும் கௌரவ உறுப்பினர்கள் அதை முடிக்கவில்லை என்ற காரணத்தினால் ஏதோ வேலைப்பழுக்கள் ஏற்பட்டிருக்கலாம். சபையில் தவிசாளராக இருக்கின்ற நீங்கள் இதை எப்படியும் சமர்ப்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நீங்கள் தனிப்பட்ட முறையில் தயாரித்திருக்கின்றீர்கள். அதை நாங்கள் பாராட்டுகின்றோம். அதே வேளை கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் தெரிவித்த கருத்தும் உள்வாங்கப்பட வேண்டிய ஒன்றுதான். என்னைப் பொருத்தமட்டில் நீங்கள் தயாரித்த அந்த ஆவணத்தை தனிப்பட்ட விடயம் என்று மறுக்கின்றபடியினால் சபைக்கான பொறுப்பு இருக்கின்றதை உணர்ந்து நீங்கள் இவ்விடத்தில் தெரிவிக்கின்றீர்கள். ஆகவே அதை நீங்கள் இப்போது தெரியப்படுத்துங்கள். அதே நேரத்தில் இதனை உதாரணமாகக் கொண்டு அந்த செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு ஒரு உதவியாக இருக்கும். அதன் பிற்பாடு சிறிய காலஅவகாசம் கொடுத்து கௌரவ உறுப்பினர்கள் தயாரித்ததன் பிற்பாடு நாங்கள் சபையில் ஏகமனதாக நிறைவேற்றுவோம் என்பது எனது தயவான கோரிக்கை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்கள் கருத்துக்களை உள்வாங்கியவனாக, நான் இதை தனிப்பட்ட முறையில் யார் யாருக்கு விருப்பம் இருக்கின்றதோ அதை என்னிடம் கேட்கும் போது நான் எனது எண்ணங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். அதன் பின் உங்கள் கருத்துகளை எழுத்தில் தரும் போது எல்லோரும் கூடி நாம் நமது காலத்திற்குள் செய்ய முடியுமானால் கட்டாயம் செய்ய வேண்டும். நான் அறிந்து கொண்டது உத்தியோகபூர்வமாக வந்தது இல்லை. ஆனால் தற்போது உத்தியோகபூர்வமாக அதுதான் வந்திருப்பதாக கேள்விப்பட்டேன். ஒன்று வட்டாரங்கள் பிரிக்கப்பட முடியாது. இரண்டு சன நெருக்கடியை மையமாக வைத்து உதாரணத்திற்கு சம்மாந்துறை 1, 2 ஒரு குறிச்சாக மாறலாம். புளக் ஜே கிழக்கு ஒன்றாக மாறலாம். அப்படி பார்த்தால் சராசரியாக 22 குறிச்சிகள் 11 குறிச்சிகளாக மாறலாம். அதே மாதிரி 10 புது கிராம சேவகர் பிரிவுகள் உருவாக்கலாம். அவர்களது வரையறைக்குள் நாம் வெற்றிகரமாக செய்து அனுப்பலாம். பிரிவினைகள் எல்லாம் விளினியடி, மலையடி, சென்னல் கிராமம், மல்வத்தை, வளத்தாப்பிட்டி அந்த பிரிவுகளுக்குள்தான் வரலாம். இதில் நோக்க வேண்டிய காரணிகள் பல இருக்கின்றது. இது ஒரு நிர்வாக அலகாக மாறுகின்ற போது சனத்தொகை, விவசாயக் காணிகள், சரித்திர முக்கியத்துவங்களை மாற்றுவதற்கான மாற்றங்கள் செய்ய இயலாது. அவைகளை கவனத்திற் கொண்டு நிச்சயமாக அதில் கவனம் செலுத்தி நாம் ஒரு முன்மொழிவை கொடுக்கின்ற சந்தர்ப்பத்தை கை விட்டோம் என்ற மனவருத்தம் இருக்கக் கூடாது. சபையாக அனுப்புவது பிரச்சினையாகும் என்றால் தனிப்பட்ட முறையிலும் அனுப்பலாம்.

அடுத்ததாக இன்றய நமது முக்கியமான முதுகெலும்பான வாழ்வாதாரம் விவசாயம். ஒரு சபையில் விவசாயம் எந்த முறையில் செய்யப்படப்போகின்றது என்ற ஒரு விளக்கம் தந்திருந்தேன். விவசாயிகளுக்கு சேதனப் பசளை பாவிக்க வேண்டும். அதே நேரத்தில் யூரியாவுக்கு பதிலாக திரவ நைதரசன் தரப்படும் என்ற உத்தரவாதம் இருந்தது. ஆனால் துரதிஸ்டவசமாக சேதனப் பசளை ஏறத்தாள எல்லோரும் பாவித்திருந்தாலும் அந்த அரசு ஊக்குவிப்பு வழங்காததால் சேதனப் பசளை செய்தவர்கள் இன்று தடுமாறுகின்றார்கள் விற்பதற்கு வழி இல்லை. அரசாங்கம் கொள்வனவு செய்வதற்கும் முன்வரவில்லை. இரண்டாவது இன்னும் அம்பாரை மாவட்டத்திற்கு திரவ நைதரசன் வரவில்லை. அதற்கு பதிலாக ஒரு திரவியம் அனுப்பப்பட்டது. அது ஒரு Bacteria Solution. அதை நிலத்திற்கு இட்டால் நிலத்தில் உள்ள காபனுடன் சேர்ந்து நமது சூழலில் இருக்கும் நைதரசனை அந்தப் பயிர் இழுத்தெடுப்பதற்கு ஊக்குவிப்பு மருந்தாக இருக்கும். ஏறத்தாள 10% விவசாயிகள் அதை பாவித்து இருக்கின்றார்கள். அதில் சிலரின் முறைப்பாடுகள் இருக்கின்றது. சிலருக்கு

பிரச்சினை இல்லை என்ற அளவுக்கும் இருக்கின்றது. ஆனால் மழை தான் எம்மை பாதுகாத்து வருகின்றது. யூரியா வெவ்வேறு விதங்களில் 30,000.00, 20,000.00 என்று இருக்கின்றது. அதில் கலப்புகளும் வருகின்றது. இதில் ஊரின் பொருளாதாரம் நிச்சயமாக வருகின்ற 2, 3 மாதங்களில் பெரியளவில் பாதிப்படையலாம். அதற்கு நாம் தீர்மானங்கள் எடுக்கின்ற போது இந்த மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதி மொழிகளை ஒழுங்கான முறையில் நிறைவேற்றாததினால் ஏழை விவசாயிகளின் பொருளாதார வீழ்ச்சிக்கு இந்த அரசு பொறுப்பேற்று அதற்குரிய நஸ்டஈடு உரியவாறு வழங்கப்பட வேண்டும் என்று ஒரு தீர்மானம் கட்டாயம் எடுக்க வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள்.

அடுத்ததாக சென்ற மாதத்தின் செலவீனங்களை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது கேள்விகள் இருப்பின் அதனை கேட்கலாம். இல்லாவிடில் அதனை ஆமோதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 100 பொது நிர்வாகம் மின் கட்டணம் பிரதான காரியாலயம் ஒக்டோபர், நவம்பர் ரூபா 48,853.45 இந்த செலவீனத்திற்கு கடந்த மாதமும் அங்கீகாரம் கொடுத்திருக்கின்றோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது ஒக்டோபர், நவம்பர் மாதத்திற்குரியது. சென்ற செலவீனத்தில் செப்டம்பர் மாதத்திற்குரிய செலவீனம்தான் அங்கீகரிக்கப்பட்டது. இது இந்த மாதத்திற்குள் கட்டப்படுகின்ற கட்டணம். விபரங்களை செயலாளரிடம் எடுக்கலாம்.

## தீர்மானம் - 04/46/01
சென்ற மாதம் 2021.11.01 தொடக்கம் 2021.11.30 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.நஜீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/46/02
நிதி உதவியாளராக கடமையாற்றிய ஜனாப் A.J.M.ஜெஸீல் என்பவர் சம்பளமற்ற விடுமுறையில் செல்வதால், நிதி உதவியாளருக்குரிய கடமைகளை திருமதி Y.B.கதீஜா உம்மா என்பவர் ஆற்றுவதற்கும், காசோலையில் 2வது ஒப்பமிடுவதற்கும், மாதாந்த நிதி உதவியாளருக்குரிய கொடுப்பனவினை வழங்குவதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/46/03
ஒவ்வொரு கௌரவ உறுப்பினருக்கும் வலுவூட்டல் நிதியாக 01 இலட்சம் ரூபா ஒதுக்கி அதற்கான வேலைத்திட்டங்களை இவ்வருட இறுதிக்குள் செயற்படுத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/46/04**

விவசாய மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழியை ஒழுங்கான முறையில் நிறைவேற்றாததனால் விவசாயிகளின் பொருளாதார வீழ்ச்சிக்கு இந்த அரசு பொறுப்பேற்று அதற்குரிய நஸ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பிரதேச சபை மட்டத்தில் சிறுவர் மற்றும் பெண்கள் குழுக்களை மேம்படுத்தல். இந்தக் குழுவில் எமது பெண் உறுப்பினர்களைக் கொண்டதாகவும் வெளியில் இருந்து நமது சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், பிரதேச செயலகத்தில் இந்தப் பகுதிக்கு பொறுப்பாக இருப்பவர்களை உள்வாங்கி அமைப்பது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். 02 சபைகளுக்கு முன் கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் இந்த விடயத்தைப் பற்றி பேசி இருந்தார். இன்று ஒரு சுற்றுநிருபமாகவோ வந்து இருக்கின்றது. இந்தக் குழுவின் தலைவராக நான் இருப்பேன்.

அடுத்ததாக 2022 ஆம் ஆண்டுக்குரிய சட்டபூர்வமாக இருப்பது ஜனவரி, பெப்ரவரி மாதத்திற்குரிய திகதிகள். செயலாளர் வருடம் முழுவதற்கும் திகதிகளை இடுவோம் என்றார். நான் கூறினேன் சட்டத்திற்குள் 48 அமர்வுகள் தான் 48 அமர்வுகளுக்கும் திகதிகளை இடுவோம் சபை நீடித்தால் அதை மாற்றிக் கொள்வோம் என்று கூறினேன்.

**தீர்மானம் - 04/46/05**

மோட்டர் கிரேடர் வாகனத்திற்கான Blades, Nut, Bolts கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/46/06**

புதிதாக திறக்கப்படவுள்ள வீரமுனை வாசிப்பு நிலையத்திற்கு நூல் கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/46/07**

அப்துல் மஜீட் ஜனாஸா மண்டபத்தில் பொருட்களை வைப்பதற்குரிய Room அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ்.நிலுஃப்பா |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அஸ்பர் அவர்கள் ஒரு கல்வெட் செய்வதற்கு முன்மொழிவு தந்திருக்கின்றார். அதற்கு பணத்தை தேட முடியுமானால் நிச்சயமாக அதை செய்வதற்கு உங்களது அங்கீகாரத்தை கேட்கின்றேன்.

## தீர்மானம் - 04/46/08

கல்லரிச்சல் - 02 இல் கோழிக்கரவர் ஒழுங்கையில் உள்ள கல்வெட்டினை திருத்தம் செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களும் ஒரு பாதையின் அவல நிலையைப் பற்றி அறிவித்திருக்கின்றார். அதற்கு இயந்திரங்களை பாவித்து நிவர்த்தி செய்யலாம் என்று நான் நினைக்கின்றேன்.

## தீர்மானம் - 04/46/09

20 வீட்டுத் திட்டத்திலே இருக்கின்ற மல்காம்பிட்டி பாடசாலைக்கு செல்கின்ற பாதையினை சபையின் இயந்திரங்களைப் பயன்படுத்தி அதனை நிவர்த்தி செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களின் பெயர்ப்பலகை செய்வதற்கு ஒரு நிறுவனத்திடம் Quotation எடுத்தேன். 40’ 18’ மரத்தால் செய்வதற்கு 12,500.00 உம், பிளாஸ்டிக் இற்கு 12,500.00 ஆகும். Stainless Steel இல் செய்வதற்கு 59,500.00 ஆனால் நிரந்தரமாக இருப்பது இதுதான். பிளாஸ்டிக் உடையலாம், மரத்தால் செய்தால் பூச்சி அரிக்கலாம். தொகை பெரிது என்பதால்தான் உங்களிடம் கேட்கின்றேன். 08 சபைகள் வரலாம். இது கௌரவிப்பதற்காகவும், நிரந்தரமாக இருப்பதற்காகவும் செய்வது. ஆகவே உங்களின் அனுமதியோடு Stainless Steel இல் செய்வோம்.

கௌரவ உறுப்பினர்களின் வேறு விடயங்களுக்கு கீழ், நான் ஒன்று கூற விரும்புகின்றேன். நமக்குள் எந்த கருத்து முரண்பாடுகள், அரசியல் முரண்பாடுகள் இருந்தாலும் இந்த சபை உங்களின் பங்களிப்போடும், உங்களின் உதவியோடும் நாம் ஒற்றுமையாக பயணித்த சபையாக வெளி உலகத்திற்கு மட்டுமன்றி நமக்குள் என்ன இருந்தாலும் நாம் ஊரின் நலனை கருதியே சகல விடயங்களும் செய்திருக்கின்றோம். அதில் தனிப்பட்ட முறைகளில் நான் எவரையும் எனது தவிசாளர் பதவியில் இருந்து புன்படுத்தி இருந்தால் உங்கள் எல்லோரிடமும் அதற்கு மன்னிப்பு கேட்டவனாக, இனி உருவாகப்போகின்ற சபையில் நீங்கள் யாராவது இந்தப் பயணத்தில் தொடரும் போது நிச்சயமாக நாம் பயணித்த காலத்தில் கற்றுக் கொண்ட பாடங்களை வைத்து இந்த ஊரின் நிர்வாகத்தை அரசியலுக்கு அப்பால் இந்த ஊரில் வாழும் சகல இன மக்களை உள்வாங்கிய ஒரு நிர்வாகமாக நடத்துவதற்கு முயல வேண்டும் என்று கேட்டு உங்களின் கருத்துகளுக்கு இடமளிக்கின்றேன்.

**தீர்மானம் - 04/46/10**

1899 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை சுகாதார சபை, பட்டின சபை, கிராம சபை மற்றும் பிரதேச சபைகளில் கடமையாற்றிய கௌரவ தவிசாளர்கள், கௌரவ உறுப்பினர்களின் பெயர் விபரங்களை Stainless Steel இல் தயாரித்து, எமது அப்துல் மஜீட் மண்டபத்தில் காட்சிப்படுத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எடுக்கப்பட்ட தீர்மானங்களோடு இன்னுமொரு தீர்மானம் எடுக்க வேண்டி இருக்கின்றது. கல்லரிச்சல் - 02ம் பிரிவில் பாதை ஓரமாக இருக்கின்ற மரங்கள் உயர்ந்து வளரப்பட்டு இருக்கின்றது. மழை காரணமாக, காற்று வீசுவதனால் மின் இணைப்பில் விழுந்து சேதம் அடையக்கூடிய நிலையில் இருப்பதனால் மக்களின் வேண்டுகோளின் பெயரில் மக்களின் ஒப்பந்தத்தோடு அந்தக் கடிதத்தை ஒப்படைத்தேன். பின்னர் மின்சார சபையுடன் கதைத்து மின் இணைப்பை துண்டித்து ஒரு நாளைக்கு 2, 3 மரங்கள் வெட்டப்படுகின்றது. மொத்தம் 14 மரங்கள் இருக்கின்றது. எனவே 3, 4 பிரிவாக வெளி நபர்களை ஒரு நாளைக்கு எடுத்து அதை வெட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அதை செய்வோம்.

**தீர்மானம் - 04/46/11**

கல்லரிச்சல் - 02ம் பிரிவில் S வாய்க்கால் அருகில் பாதை ஓரமாக ஆபத்து விளைவிக்கக்கூடிய மரக் கிளைகளை வெளி நிபுணத்துவம் கொண்டவர்களைக் கொண்டு வெட்டுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல்.அஸ்பர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இது இறுதியாகவும் இருக்கலாம் அல்லது அடுத்த மாதமும் சந்திப்போமா என்றும் தெரியாது. எங்களது பிரதேச சபையிலே பெண்கள் என்ற ரீதியில் எங்களது சபைக்கும், ஊருக்கும், உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மிகவும் பெருமை தேடித்தந்த எங்களது கௌரவ உறுப்பினர் சிஹாமா சியாஸ் அவர்களை மனமார வாழ்த்தி இன்னும் அவரது முயற்சிக்கு அல்லாஹ் உறுதுணை புரிய வேண்டும் என்றும், அவருக்கு நாம் எல்லோரும் பக்க துணையாக இருக்க வேண்டும் என்றும் நான் இறைவனை பிரார்த்தித்தவளாக, இந்த சபையில் உண்மையிலே சில வேலைகளை செய்திருக்கின்றோம். இப்போது சபை முடிவடையும் போது மிகவும் கவலையாக இருக்கின்றது. மகளிர் வலுவூட்டலில் ஒரு இலட்சம் ரூபா தரப்போவது என்பது நாங்கள் எவ்வாறு பயன்படுத்துவது என்ற சிந்தனையில்தான் இவ்வளவு நேரமும் நீங்கள் பேசும் போது கேட்டுக் கொண்டிருந்தோம். எங்களுக்கு மீண்டும் இந்த சந்தர்ப்பம் கிடைக்குமா என்பது உண்மையிலே நாங்கள் எதிர்பாராத ஒன்று, இந் நிதியில் பெண்களுக்காவது 02 இலட்சமாக மாற்றித் தர வேண்டும் என்று எல்லா உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

தயவு செய்து இது நான் தனிநபராக எடுக்கின்ற முடிவு அல்ல. நான் தவிசாளராக இருக்கின்றேன் உங்களிடம் இருந்துதான் தவிசாளருக்கு அங்கீகாரம் வருவது. நாம் சென்ற முறை வரவு செலவுத்

திட்டத்தில் 02மில்லியன் ஒதுக்கப்பட்டது. வரவு செலவுத் திட்டத்திற்குள் 03மில்லியன் இருந்தால் நாம் எப்படி என்றாலும் எடுக்கலாம். ஒதுக்கிய தொகைக்கு மேலதிகமாக செய்தால் அடுத்த முறை Audit Query ஆக வரும். வரவு செலவுத் திட்டத்தில் என்ன இருக்கின்றதோ அதை பூர்த்தி செய்வோம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் கேட்பது பெண்கள் 06 பேருக்கும் 02 இலட்சமாக மாற்றித் தாருங்கள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாங்கள் தாயில் இருந்து பெரிதாக மதிப்பது பெண்கள். ஆரம்பத்தில் சொன்னேன் மிகவும் பக்குவமாக கௌரவத்தோடு உங்களுக்கு எல்லா வசதிகள் தந்தும், எந்த சபையும் பெண் அங்கத்தவர்களுக்கு செய்யாத கௌரவங்களை இந்த சபை செய்திருக்கின்றது. எதற்கும் தடையாக இருந்ததில்லை. உங்களை இவ்வளவு கௌரவத்தோடு நடத்தியதற்கு ஆண்களுக்கு நீங்கள் நன்றி செலுத்த வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களுக்கு எந்த வகையிலும் உறுதுணையாக இருந்து எங்களது பேச்சுகளுக்கு தடையில்லாமல் எங்களை இந்த சபையில் பேசுவதற்கும், எங்களது சில காரியங்களுக்கு ஒத்துழைத்த சகல உறுப்பினர்களுக்கும் பெண் உறுப்பினர்கள் சார்பாக நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உங்கள் கூற்றுக்கமைவாக 2011 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக வருகின்றோம். இந்த சபையில் எந்தவொரு உறுப்பினருக்கும் மனம் நோகும்படி நடந்து இருந்தால் தயவு செய்து மன்னித்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் நீங்கள் மன்னிக்காத வரையில் இறைவன் மன்னிக்க மாட்டான். அடுத்தது எமது கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி, அவர் கற்றுக் கொண்ட கல்வி, அவரது மொழித்திறன் இவைகளை வைத்து சபைக்கு கௌரவமான முடிவை எடுத்துத் தந்திருக்கின்றார். அவர் எடுத்த பரிசில் நமக்கு ஏதாவது வழங்க வேண்டும் என்று கேட்காமல் நாம் அவரை கௌரவிக்க வேண்டும். அதற்காக ஏனைய உறுப்பினர்களை குறைவாக நினைக்கவில்லை. அவர்களும் அவர்களது பங்களிப்பை செய்திருக்கின்றார்கள். அதே போன்று சகல உறுப்பினர்களும் இந்த சபையில் எவ்வளவு செய்ய இயலுமோ அவ்வளவுக்கு செய்திருக்கின்றார்கள். எந்தவொரு உறுப்பினரையும் குறை சொல்ல இயலாது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையானவர். அவர்களிடம் இருந்து திறமைகளைதான் எதிர்பார்க்கலாம்.

நீங்கள் சொன்னமாதிரி பொருளாதார விடயத்தில் தாவரத்திற்கு தேவையான மிக முக்கியமான மூலகங்கள் நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம். நைதரசன்தான் ஒரு தாவர வளர்ச்சிக்கு மிக முக்கியமான ஊக்கி. நைதரசன் தாவரத்திற்கு தேவை என்பதை அரசாங்கம் ஏனோ என்னைப் பொருத்தவரையில் ஒரு குறை. அதன் பாவனை தொடர்ச்சியாக எந்தளவுக்கு இருக்கும் என்றால் 100, 150 வருடத்திற்கு பின் மண் மலட்டுத்தன்மை அடைந்துவிடும். முதல் எமது வருமானம் தேயிலை, தென்னை, இறப்பரில் இருந்த வருமானம் மாறி வெளிநாட்டவர்கள் வருகின்ற வருமானம்தான் அதிகமாக இருக்கின்றது. 60% பொருளாதாரம் விவசாயத்தில்தான் இருக்கின்றது. ஆனால் வளர்ச்சியடைந்த நாடுகள் கைத்தொழில் புரட்சியில் வளர்ச்சி அடைந்திருக்கின்றது. எமது சம்மாந்துறையை பொருத்தவரையில் 100% விவசாயத்தில் தங்கி இருக்கின்றோம். விவசாயத்தில் தங்கி இருந்தாலும் விவசாயத்தில் உள்ளடக்கப்பட்ட நிலங்கள் பெருகவில்லை. அதே நிலத்திற்குள்தான் விவசாயம் செய்து கொண்டு அதைத்தான் வளப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

அதே போல் நெல்லை விநியோகிப்பதில் பிழைகள் இருந்தாலும் அவ்வளவு நெல்லும் எமது நகரத்தை விட்டு வெளியே சென்றுதான் மற்றவர்கள் உழைத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இதை நாம் எப்படி நவீனமாக பயன்படுத்துவது என்று யோசிக்க வேண்டும். இப்போது கல்விதான் முக்கியம். எவ்வளவோ கல்விக் கூடங்களை வைத்து இளைஞர்கள் வேறு திசையில் சென்று

கொண்டிருக்கின்றார்கள். தற்போது மாற்றுத்திறனாளிகளுக்கான முயற்சி பயனளித்திருக்கின்றது. மாற்றுத்திறனாளிகள் விடயம் பல கோணங்களில் ஆராயப்பட்டு எம்மை விட திறமை காட்டக்கூடிய அளவுக்கு கொண்டு வருகின்றார்கள். அந்த நிலையங்கள் இருப்பதனால் எத்தனையோ பிள்ளைகள் வாழ்கின்றது. இங்கு இருக்கின்ற பிள்ளைகள் அகில இலங்கை ரீதியாகவும் பரிசு பெற்று வந்திருக்கின்றார்கள். எந்தவொரு பிள்ளையையும் வளம் குன்றியதாக நினைத்துவிடாமல் சகலரும் சமனான குழந்தைகள் என்ற எண்ணப்பாடு உருவாக வேண்டும். எனது கடையில் வேலை செய்த ஒருவரின் மகனை இப்படி செய்யலாம் சொன்னேன். இன்றைக்கு அவரின் மகன் வெளிநாட்டில் இருந்து கொண்டிருக்கின்றார். அதே மாதிரி அனைத்து மாற்றுத்திறனாளிகளும் எம்மைவிட மேலானவர்களாக வாழ வேண்டும். இதற்கு நாம் உதவி செய்ய வேண்டும்.

அடுத்ததாக நமது சபையில் அடிக்கடி கூறப்பட்ட விடயம் ஒரு சிலருக்கு கசப்பாக இருக்கலாம். ஒரு தொகுதியில் வெற்றி பெற்ற வட்டாரங்கள் ஒன்று வீரமுனை, அடுத்தது வளத்தாப்பிட்டி. நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு சம்மாந்துறை வட்டாரத்தில் 1400 இற்கு மேற்பட்ட வாக்குகளை பெற்றிருக்கின்றார். ஆனால் அவருக்கு எதிராக அந்த வட்டாரத்தில் 2000 வாக்குகள் இருக்கின்றது. மனதில் நாங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் நாங்கள் அதிகமான வாக்குகள் எடுத்தாலும் எங்களுக்கு எதிரானவர்கள் அதிகமாக இருக்கின்றார்கள். இந்த சபையில் பல முறை தேசியப் பட்டியல் உறுப்பினர்களைப் பற்றி தரக்குறைவாக கதைத்து சண்டைகளும் ஏற்பட்டிருக்கின்றது. தனக்கு மட்டும்தான் என்று இவ்வளவு காலம் கூறினாலும் அடுத்தவர்களுடனும் சேர்ந்து அந்த வட்டாரத்தின் அரவணைப்பாக சென்றால் அடுத்த முறை தேர்தலில் வருகின்ற போது எதிராக இருக்கமாட்டார்கள். மீண்டும் வாய்ப்பிருந்தால் இதே உறுப்பினர்கள் வந்தால் இவ்வாறு செய்ய வேண்டும் என்று கேட்டு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு இந்த சபைக்கும் கௌரவ தவிசாளர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அரசியலில் எதிரி என்ற சொல்லை ஒருவரும் பாவிக்காதீர்கள். நான் பாவிப்பது மாற்றுக் கருத்துள்ளவர்கள். ஒரு வாக்காலும் ஒரு வட்டாரத்தை வெல்லலாம். அதனால் மற்றவர்கள் தோற்றவர்கள் என்று இல்லை. ஒருவர்தான் வெற்றி பெறலாம். எதிரி என்ற சொல்லை பாவிக்காதீர்கள்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த சபையிலே எங்களது சக கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் பெற்றிருக்கின்ற இந்த விருதானது சபைக்கு மாத்திரமல்ல இந்த ஊருக்கும் பெருமையை ஏற்படுத்தித் தந்திருக்கின்றது. அந்த வகையிலே நான் அவரை பாராட்டுகின்றேன். அதே போல் இந்த சபையிலே இருக்கின்ற கௌரவ பெண் உறுப்பினர்கள் எந்த மதமாக எந்தக் கட்சியாக இருந்தாலும் கண்ணியமாக நடந்து கொண்டிருக்கின்றார்கள். முதன் முதலாக இந்த சபைக்கு வந்து அவர்கள் முன்னுதாரணமாக இருந்திருக்கின்றார்கள். இதற்கு பின்னர் வருகின்ற மற்றய பெண் உறுப்பினர்களுக்கும் முன்னுதாரணமாக நடந்து காட்டி இருக்கின்றார்கள். எந்தவொரு கருத்தரங்காக இருந்தாலும் சரி எந்தக் கூட்டமாக இருந்தாலும் தைரியமாக ஊரின் நிலைப்பாட்டை முன்வைத்து அதிலே கலந்து சிறப்பித்த சகல பெண் உறுப்பினர்களுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இவ்வளவு காலமும் எந்தவிதமான அரசியல் கட்சிகளிலே வேறு வேறாக இருந்தாலும் சபை என்று வருகின்ற போது நாங்கள் ஒற்றுமையாக பயணித்து இருக்கின்றோம். பல இடங்களிலே பெருமையாக பேசி இருக்கின்றோம். எமது ஊர் தேர்தல் காலத்தில் மாத்திரம்தான் நாங்கள் வேறு கட்சிகள், வேறு கருத்துக்களில் இருந்தாலும் தெரிவு செய்யப்பட்ட சபையிலே வருகின்ற போது சகல அங்கத்தவர்களும் ஒரு குழுவாக இயங்கித்தான் எங்களது செயற்பாடுகளை முன்னெடுத்திருக்கின்றோம். எதிர்க்கட்சி என்கின்ற பெயரே இல்லை. எல்லாரும் சபை அங்கத்தவர்கள். சமமான அந்தஸ்த்தை உடையவர்கள். வட்டாரங்களிலே நேரடியாக வென்றாலும் சரிதான் தேசியப் பட்டியலில் நியமிக்கப்பட்டாலும் சகல அங்கத்தவர்களும் சமமான கௌரவ உறுப்பினர்கள் என்ற அந்தஸ்த்தை பேணி நாம் இவ்வளவு காலமும் பயணித்திருக்கின்றோம். அதற்காக எல்லா உறுப்பினர்களும் அவ்வாறு நடந்து கொண்டதற்காக எனது தனிப்பட்ட நன்றியையும் இனிமேல் வருகின்ற சபைகளிலே நீங்கள் மீண்டும் வெற்றி பெற்று வர வேண்டும் என்று ஆசி கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பிரதேச சபையில் இருக்கின்ற கௌரவ தவிசாளர் உட்பட ஒவ்வொரு உறுப்பினர்களையும் பெருமிதம் கொள்ள வேண்டும். ஏனென்றுசொன்னால் எங்களது கருத்துக்களை உள்வாங்குவதில் சம்மாந்துறை பிரதேச சபை முன்னுதாரணமாக இருக்கின்றது. அதை ஒவ்வொரு பயிற்சி நெறிக்கு செல்கின்ற நேரத்தில் நான் அதை சுட்டிக்காட்டி இருக்கின்றேன். இந்த இடத்தில் 2, 3 விடயங்கள் சம்மந்தமாக கதைக்க வேண்டும் என்று வந்தேன். ஆனால் இது இறுதி அமர்வாக இருந்தாலும் இருக்கலாம் என்றதனால் முதல் கதைக்க வேண்டிய விடயம் வீதியோரங்களில் இருக்கின்ற ஹொட்டல்கள், பெரிய கடைகளுக்கு வாகனத்தரிப்பிடங்கள் இல்லாமல் இருப்பதனால் வீதியால் பயணிக்கின்ற சிறுவர்களுக்கும், முதியவர்களுக்கும் மிகவும் அசௌகரியமான முறைக்கு உள்ளாக்கப்படுவதை அதனால் நான் நடந்து செல்லும் போது எனக்கு அறியக் கிடைத்தது. விபத்துக்கள் நடக்காமல் இருப்பதற்கு எமது சபையால் போக்குவரத்து பொலிஸார் மூலம் நடவடிக்கை எடுக்க இயலும் என்றால் அதை எடுக்க வேண்டும் என்று இவ்விடத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்ததாக தைக்காப்பள்ளி 5ம் வட்டாரத்தில் கூடுதலான உறுப்பினர்கள் வதிவிடவாதிகளாக இருக்கின்றார்கள். முதல் தேவை என்னவென்றால் அங்கு கிளினிக் நடத்துவதற்கான ஒரு இடம் இல்லாத நிலையில் இருக்கின்றது. 5ம் வட்டாரத்தில் ஏதாவது அரச காணிகள் அல்லது சபைக்குட்பட்ட காணிகள் இருந்தால் அதில் ஒரு கிளினிக் நிலையம் அமைக்க வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோள். 5ம் வட்டாரத்தில் இருக்கின்ற கற்பிணித்தாய்மார்களும், குழந்தைகளும் கிளினிக் செல்வதாக இருந்தால் சம்மாந்துறை வைத்தியசாலைக்கும், கல்லரிச்சல் கிளினிக் நிலையத்திற்கும் சென்று அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்கின்றார்கள். பெண்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்தை குறைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன்.

சம்மாந்துறை பிரதேச சபையில் இருக்கின்ற கௌரவ உறுப்பினர் சிஹாமா சியாஸ் அவர்கள் நடந்த அபிமானி போட்டியில் முதல் பரிசை பெற்றிருக்கின்றார். அது சம்மாந்துறை பிரதேச சபைக்கு கிடைத்த முதலாவது வெற்றி. நீங்கள் சொன்னது போன்று NGO க்களும் வலுப்படுத்துது என்று சொல்வதில் உண்மையிலே நானும் அதில் வெற்றியடைந்த உறுப்பினராக சொல்கின்றேன். கடந்த மாதம் எங்களுக்கு கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ் பேசும் உறுப்பினராக நான் அந்த சபையில் பகிர்ந்து கொண்டு ஒரு Advercasive செய்வதற்கு கிடைத்தது. அது AWF நிறுவனம் ஊடாக நடைபெற்ற Programme இதில் பெண்கள் அரசியலில் 25% மாகாண சபைக்கும், பாராளுமன்றத்திற்கும் உட்பிரவேசிக்க வேண்டும் என்று ஒரு Advercasive என்னால் செய்ய முடிந்தது. அதற்கு எனக்கு எவ்வளவுதான் NGO க்கள் வலுப்படுத்தி இருந்தாலும் உண்மையிலே நான் அதற்கு செல்வதற்கு முன் கௌரவ தவிசாளர் உங்களையும் அணுகி, காரியாலயத்தில் இருக்கின்ற செயலாளரையும் அணுகி அது சம்மந்தமான நுணுக்கமான அறிவுரைகளை பெற்றுக் கொள்வதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அந்த வாய்ப்பை தந்த உங்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொண்டு இந்த சபையில் இருக்கின்ற கௌரவ உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் எல்லோருக்கும் ஏதாவது மனம் நோகும்படி நடந்து கொண்டால் அதையும் மன்னிக்க வேண்டும் என்று கூறி மிகவும் தாழ்மையாக கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் கூறிய விடயத்திற்கு நான் உடனடியாக பதில் கொடுக்க வேண்டும் என்பதற்காக தலையிடுகின்றேன். நெல்லுப்பிடிச் சந்தியில் இருந்து மணிக்கூட்டுக் கோபுரம் வரை கடைகள் பாதை ஓரமாகத்தான் இருக்கின்றது. நடைபாதை ஒன்று இல்லை. அதனால் அப்படியான இடங்களில் நாம் உத்தியோகபூர்வமாக எழுதி அதை No Parking Area வாக மாற்ற வேண்டும். கட்டணம் இல்லாத கடைகளுக்கு முன் Parking செய்ய இயலாது என்ற முடிவை நாம் போக்குவரத்து பொலிஸாருக்கு எழுத்தில் அறிவித்து No Parking Board போட வேண்டும்.

அடுத்தது கிளினிக் சென்டர் சம்மந்தமாக நாம் மாதத்திற்கு ஒரு தடவை அப்துல் மஜீட் மண்டபத்தை பாவிப்பதற்கு நாம் MOH Office இற்கு அனுமதி கொடுப்போம்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அந்தப் பிரதேசத்தில் Weaving Center இருக்கின்றது. அதை நிரந்தரமாக பாவிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இது சிறந்த முடிவு. Weaving Center வேறு திணைக்களத்திற்கு கீழ் இருக்கின்றது. அதை மாற்றி எடுப்பதற்கு நீண்ட நாள் தேவை. அதை விட அப்துல் மஜீட் மண்டபத்தை வழங்குவது சிறந்ததாக இருக்கும்.

**தீர்மானம் - 04/46/12**

கற்பிணிப் பெண்களுக்கான கிளினிக் நடாத்துவதற்காக மாதத்திற்கு ஒரு தடவை அப்துல் மஜீட் மண்டபத்தை வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.நிலுவ்பா |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, உங்களுடைய கருத்திற்கமைய இந்த சபை இந்த அமர்வோடு முடியுமானால் அதனை சந்தோசமாக ஏற்றுக் கொண்டு, இந்த சபையிலே ஒரு உறுப்பினராக முதலாவது தடவையாக நான் வந்திருந்தேன். அதுவும் மிகவும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்ற மக்கள் இருக்கின்ற பிரதேசத்திலே இருந்து இந்த சபைக்கு ஒரு அங்கத்தவராக நான் தெரிவு செய்யப்பட்டு வந்திருந்தேன். அல்ஹம்துலில்லாஹ் உங்களது தலைமைத்துவத்தின் கீழ் இந்த சபையிலே அங்கத்தவனாக இருந்ததற்கும் உங்களது வழிகாட்டலின் கீழ் எங்களுடைய செயற்பாடுகளை செய்தமைக்கும் நான் மிகவும் பெருமிதம் அடைகின்றேன். இவ்வாறு எங்களுடைய சபைக்கு முதன் முதலாக தெரிவு செய்யப்பட்டு வந்த 06 பெண்கள் இந்த சபையிலே இருக்கின்றார்கள். என்னைப் போன்று இந்த சபையிலே முதல் முறையாக தெரிவு செய்யப்பட்டு வந்த ஏனைய உறுப்பினர்களும் இருக்கின்றார்கள். அந்த 06 பெண் உறுப்பினர்களிலே எங்களது சபைக்கும் ஊருக்கும் பெருமை தேடித்தந்த சிஹாமா சியாஸ் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த சபைக்கு வருகின்ற போது ஒரு தனி மனிதனாக இந்த சபை என்றால் என்ன, உள்ளூராட்சி மன்றங்கள் என்றால் என்ன என்று விளங்கிக் கொள்ளாத காலகட்டத்தில்தான் இந்த சபைக்கு வந்திருந்தேன். அந்த சந்தர்ப்பத்திலே இந்த சபையினுடைய உள்ளூராட்சி மன்றங்களின் சட்டதிட்டங்கள் அதனை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை எல்லாம் நான் கேட்கின்ற போதெல்லாம் மிகவும் மனம் சளைக்காமல் எனக்கு அந்த சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி மிகவும் அறிவுரை கூறிய இந்த சபையினுடைய செயலாளர் அவர்களையும் நான் மிகவும் கண்ணியமாக மதித்தவனாக, இந்த சபையிலே இருந்து ஏறத்தாள நான் தெரிவு செய்யப்பட்ட வட்டாரத்திலே மிகக் கூடுதலான தேவைகள் நிரம்பிய வட்டாரமாகத்தான் இருந்தது. இருந்தாலும் இந்த சபையின் நிதியைப் பயன்படுத்தி செய்ய முடியாமல் போனாலும் சபையின் வளங்களைப் பயன்படுத்தி இந்த சபையைப் பயன்படுத்தி இந்தப் பிரதேசத்திலே கூடுதலான தேவைகளை பூர்த்தி செய்திருக்கின்றேன். அந்த பிரதேசத்திலே இருந்த கூடுதலான பாதைகளை அபிவிருத்தி செய்யக்கூடிய சந்தர்ப்பம் நான் ஒரு உறுப்பினராக வந்தமையினால் கிடைத்தது. அதே போன்று அந்த பிரதேசத்தினுடைய மிக முக்கியமான தேவையாக இருந்த வைத்தியசாலை கட்டடத்தை கட்டுவதற்கும், அதனை கொண்டு வருவதற்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.

இந்த சபை உதாரணமாக முழு இலங்கை நாட்டிலே உள்ள அனைத்து மாநகர சபைகள், நகர சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் எல்லாவற்றிற்கும் ஒரு முன்னுதாரணமான சபையாக இருக்கின்றது. அதனை நான் கடந்த 2019 ஆம் ஆண்டு கௌரவ ஆளுநர் செயலகத்திற்கு சென்ற போது றோஹித்த போகல்லாகமக சேர் அவர்களை சந்திப்பதற்காக கிழக்கு மாகாண ஆளுநர்

செயலகத்திற்கு சென்ற போது அவர் மிகவும் பெருமிதமாக இந்த சபையை கூறினார். அத்தோடு நீங்கள் இந்த சபையினுடைய கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் கீழ் ஒரு உறுப்பினராக இருப்பது மிகவும் ஒரு திடகாத்திரமான ஒரு காலகட்டம் என்றும் கூறி இருந்தார். இவை எல்லாம் இந்த சம்மாந்துறை மண்ணில் பிறந்த ஒவ்வொருத்தராலும் கிடைக்கக்கூடிய ஒரு நற்செய்திகள் அல்லது சிறந்த சந்தர்ப்பங்கள் என்று அதனை கருத்திற் கொள்ளலாம். அவ்வாறு இருக்கின்ற போது எங்களுடைய சபையினுடைய நடைமுறைகள், கௌரவ தவிசாளர் அவர்கள் அங்கத்தவர்களை நடைமுறைப்படுத்துகின்ற விதம், குறிப்பாக இந்த சபையிலே 04 வரவு செலவுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கின்றது. இலங்கை திருநாட்டிலே உள்ள எந்தவொரு உள்ளூராட்சி மன்றங்களிலும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்ட 04 வரவு செலவுத் திட்டம் என்றால் அது சம்மாந்துறை பிரதேச சபையையே சாரும். அந்த இடத்திலும் நான் மிகவும் பெருமிதம் அடைகின்றேன்.

அதே போன்று எமது ஊரின் உள்ளக நிர்வாக நடைமுறைகள் என்று வருகின்ற போது உங்களுடைய சிறந்த அரசியல் அனுபவம், வெளி நிறுவனங்களில் கடமையாற்றிய அனுபவம், இந்த ஊரிலே உங்களுடைய பரம்பரை பரம்பரையாக அரசியல் ரீதியாக அவர்கள் செய்து வந்த செயற்பாடுகள் எல்லாவற்றையும் வைத்து இந்த ஊரை ஒரு சிறந்த நிர்வாக ரீதியாக செயற்படுத்த வேண்டும் என்கின்ற உங்களுடைய அந்த எண்ணத்தையும் வரவேற்றவனாக,

அந்த வகையிலே கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று நான் முதன் முதலாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன். கிராம சேவகர் பிரிவுகளின் எல்லை நிர்ணயம் சம்மந்தமாக அமைச்சில் இருந்து ஒரு சுற்றுநிருபம் வந்திருக்கின்றது. ஏற்கனவே வந்த சுற்றுநிருபத்திற்கு தாங்கள் அனுப்பிய திட்டமிடல் பிழையாக இருக்கின்றதாக மீண்டும் அதனை சீர் செய்து அனுப்புவதற்காக ஒரு பரிந்துரை வந்திருக்கின்றது. எனவே இது என்னைப் பொருத்தவரைக்கும் ஒவ்வொரு கௌரவ உறுப்பினர்களது தேவை என்று நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒட்டுமொத்த ஊரினுடைய தேவை. நாங்கள் அறிந்த வகையிலே இந்த சம்மாந்துறையோடு இணைந்திருந்து பிரிக்கப்பட்ட 02 எல்லைகள் இருக்கின்றது. ஆனால் அது Official ஆக இல்லாவிட்டாலும் Un Official ஆக எங்களுக்கு கிடைக்கின்ற தகவல்களின் படி அந்த பிரிப்பு முறைகளில் பாரிய சிக்கல்கள் ஏற்பட்டு இருக்கின்றன. எங்களுடைய ஊர் மக்கள் அந்த சிக்கல்களையும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நாங்கள் அனுபவ ரீதியாக பெற்றுக் கொண்டிருக்கின்றோம்.

சம்மாந்துறையில் இருந்து பிரிந்து சென்றதுதான் நாவிதன்வெளி பிரதேச சபையும், நாவிதன்வெளி பிரதேச செயலகமும். அவ்வாறு சம்மாந்துறையில் இருந்து பிரிந்து சென்றதுதான் இறக்காமம் பிரதேச சபையும், இறக்காமம் பிரதேச செயலகமும். இன்று மாகாண சபைகளுக்காக பிரிக்கப்பட்டிருக்கின்ற எல்லைகளிலே இருந்து சம்மாந்துறை பிரதேச செயலக மற்றும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வளத்தாப்பிட்டி கிராம சேவகர் பிரிவு வேறாக்கப்பட்டு இருப்பதாகவும் அண்மைக்காலமாக எங்களுக்கு தகவல் கிடைக்கப்பெற்றிருந்தது. இன்று அரசின் சுற்றுநிருபத்திற்கு ஏற்றவாறு நாங்கள் கடந்த காலங்களிலே விட்ட தவறுகள் ஏற்படாமல் இந்த ஊரினுடைய கிராம சேவகர் பிரிவு விடயங்களை ஒட்டுமொத்த கௌரவ உறுப்பினர்களும் இருந்து அதனை செய்ய வேண்டும். ஒவ்வொருத்தருடைய தொனியிலே செய்கின்ற போது அதிலே இழுபறிகள் வரலாம். ஒரு அனுபவம் வாய்ந்த கௌரவ தவிசாளர் இந்த ஊரினுடைய முதல் மகன் என்ற வகையில் என்னுடைய பணிவான வேண்டுகோள் உங்களது தலைமையில் உங்களது கருத்தாலோசனையின் படி இந்தப் பிரிவினைகள் இந்த ஊருக்கு எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தாமல் பிரிக்கப்பட வேண்டும் என்பதை உங்களிடம் வேண்டிக் கொள்கின்றேன்.

எங்களுடைய இந்த சபையிலே கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன் அவர்கள் 02 வருடங்கள் பிரதித் தவிசாளராகவும், 01 வருடம் கௌரவ உறுப்பினராகவும் இருந்து அவர் பெருமனம் கொண்டு அந்தப் பதவியை தன்னுடைய இன்னொரு சகோதரிக்கு விட்டுக் கொடுத்து சென்றிருக்கின்றார். நாங்கள் இந்த சபையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் எல்லோரையும் புகைப்படம் எடுக்க வேண்டும் அதனை காட்சிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எங்களது எண்ணத்திலே இருந்து அதனை வெளிப்படுத்தினோம். அந்த வகையிலே கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன் அவர்களையும் இந்தக் குழுவோடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று பணிவாக வேண்டிக் கொள்கின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, என்னுடைய வட்டாரத்திலே இருக்கின்ற சென்னல் கிராமம் - 02ம் பிரிவிலே உள்ள விளாவடி வீதியில் ஏறத்தாள 800 மீற்றர் நீளமான வீதியில் 133 மீற்றர் வீதியினை பலவந்தமாக மக்கள் பாவனைக்கு விடாமல் பல வருடகாலமாக தடுத்து வைக்கப்பட்டு இருக்கின்றது. இன்று அந்தப் பாதையினை சீர் செய்வதற்காக JAICA நிறுவனத்தினூடாக மதிப்பீட்டறிக்கைகள் செய்யப்பட்டு இருக்கின்றது. ஆனால் அங்கு தெரிவித்த கருத்தின் அடிப்படையில் அவர்களுடைய வேலையை செய்வதற்காக நாங்கள் அந்தப் பாதையில் இருக்கின்ற இடையூறுகளை வெளியேற்றித்தர வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். இது சம்மந்தமாக கடந்த 2019.11.07 ஆந் திகதி சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்கு என்னுடைய அறிவித்தலை விடுத்திருந்தேன். அதன் அடிப்படையில் அவர்கள் பலவந்தமாக பிடிக்கப்பட்டவர்களிடம் இருக்கின்ற அனுமதிப்பத்திரத்திற்கு ஏற்றவாறு அந்தக் காணியை அளவீடு செய்து மேலதிகமான காணியாக அவர் மக்கள் பயன்படுத்தக் கூடிய பாதையை பிடித்திருக்கின்றார். எனவே சம்மாந்துறை பிரதேச செயலகம் அந்தப் பாதையினை அடையாளப்படுத்தி தருவதாக கூறியிருக்கின்றார்கள். எந்தவிதமான எழுத்து மூலமும் இல்லை. கலந்துரையாடல் மூலம் கூறியிருக்கின்றார்கள். இந்தப் பாதையை அகற்றுகின்ற போது அதிலே பாரிய மரங்கள் இருக்கின்றது. எங்களது சபையினுடைய இயந்திரங்களை பயன்படுத்தி செய்யமுடியாது. நாங்கள் வெளியில் இருந்துதான் இயந்திரங்களை பெற்றுக் கொண்டு செய்ய வேண்டும். அவ்வாறு வருகின்ற போது அந்த வேலையை செய்ய வேண்டும். இதனை துரிதமாக செய்வதற்கு இந்த சபையின் ஊடாக பிரதேச செயலகத்திற்கு எழுத்து மூலம் அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இறுதியாக கௌரவ தவிசாளர் அவர்களே, வலுவூட்டல் தொடர்பாக பெண் உறுப்பினர்களுக்கு விட்டுக் கொடுப்பதில் எனக்கு எந்தவிதமான ஐயமும் இல்லை. ஆனால் இவர்கள் இதனை வெளிப்படுத்துவார்களானால் பாரிய நடைமுறைச் சிக்கலுக்கு உள்ளாக வேண்டியவன் நான் தான். கூடுதலான வாழ்வாதாரங்களை பெற்றுக் கொள்ளக்கூடிய தேவையுடையவர்கள் எனது வட்டாரத்தில்தான் இருக்கின்றார்கள். இருந்தாலும் வலுவூட்டல் சம்மந்தமாக நாங்கள் சபை நிதியினை பிரிவினை செய்கின்ற போது என்னுடைய வேண்டுகோள் வட்டார ரீதியாக இந்தப் பணத்தினை பிரிவினை செய்ய வேண்டும். ஏனென்றால் தேவை குறைந்த வட்டாரங்களில் கௌரவ உறுப்பினர்கள் கூடுதலாக இருக்கின்றார்கள். தேவை கூடிய வட்டாரங்களிலே உறுப்பினர்கள் குறைவாக இருக்கின்றோம். எனவே இந்த சபையின் நன் நோக்கத்தின் அடிப்படையில் இதனை தெரிவு செய்ய வேண்டும்.

அத்தோடு உங்களிடம் தந்திருக்கின்ற பாதை, பாதையின் அவல நிலை என்று சொன்னீர்கள். உண்மையாக பல்வேறுபட்ட பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டாலும் இந்தப் பாதையின் தலைவிதி மாறுவதில்லை. அந்தப் பாதை 20 வீட்டுத்திட்டத்திலே இருக்கின்ற மல்காம்பிட்டி GMMS பாடசாலைக்கு செல்கின்ற பாதை. இது ஒரு பாடசாலைக்கு செல்கின்ற பாதையாக இருக்கின்ற படியினால் சபையினால் அந்தப் பாதையை சீர்திருத்தினோம் என்ற நற்பெயரோடு செல்ல வேண்டும் என்பதற்காக இதை சமர்ப்பித்திருந்தேன். கௌரவ உறுப்பினர்கள் அனைவரிடமும் மிகவும் பணிவாக வேண்டிக் கொள்கின்றேன். இந்தப் பாதையினை சீர்திருத்தம் செய்வதற்கு உங்களுடைய ஆழ்ந்த அனுமதியை பெற்றுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களின் கருத்துக்களில் நாம் சரித்திரத்தை உள்வாங்கி ஜீரணித்தால் எதிர்கால முடிவுகளை சரியாக செய்யலாம். சம்மாந்துறைப்பற்றுக்கு கீழ் ஐரோப்பியரின் ஆட்சிக் காலத்தில் முழு மாவட்டமும் சம்மாந்துறைப்பற்று, அக்கரைப்பற்று அதற்கு பின்னர் பிரிந்து சென்றது. நிர்வாக அலகுகளாக வரும்போது சம்மாந்துறை பட்டின சபை அதற்கு பின்னர் இருந்தது நாவிதன்வெளி பட்டின சபை. அதற்கு பின்னர் உருவானதுதான் சம்மாந்துறை கிராம சபை, நாவிதன்வெளி கிராம சபை, மல்வத்தை கிராம சபை, இறக்காமம் கிராம சபை. அதன் பின் இவை எல்லாவற்றையும் ஒன்றாக்கியதுதான் பிரதேச சபை.

இறக்காமம் எல்லைக்கும், சம்மாந்துறை எல்லைக்கும் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. நாவிதன்வெளியை பொருத்தவரையில் நாவிதன்வெளி பிரதேச சபையில் சொறிக்கல்முனை 2 அதன்

கிழக்கு எல்லை முறிகண்டி, சொறிக்கல்முனையின் மேற்கு எல்லை வலுக்கம்மடு. அதனால் சொறிக்கல்முனை – 02 நாவிதன்வெளி பிரதேச சபைக்குள் வரவேண்டும் என்று சில அழுத்தங்கள் வந்ததனால் சொறிக்கல்முனை நாவிதன்வெளிக்குள் சென்றது. உண்மையாக சரித்திர ரீதியாக சொறிக்கல்முனை – 02 இற்கும் சம்மாந்துறைக்கும் மிகவும் பிண்ணிப் பிணைந்த தொடர்புகள். ஆனால் அந்தக் காலத்தில் சில அழுத்தங்களால் சொறிக்கல்முனை நாவிதன்வெளிக்குள் சென்றுவிட்டது. அதனால்தான் முறிகண்டி வீரமுனை – 04 இன் எல்லை சம்மாந்துறை எல்லையாக மாறியது.

முன்னாள் கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன் அவர்களின் புகைப்படம் நிச்சயமாக இதில் சேர்க்கப்படும். அடுத்தது விளாவடி வீதி ஒரு தீர்மானம் எடுப்போம். அந்தப் பாதையின் உரிய எல்லைகள் இனங்காணப்பட்டு சபைக்கு பாரம் தர வேண்டும் என்ற முடிவை பிரதேச செயலகத்திற்கு அறிவிப்போம்.

20 வீட்டுத் திட்டத்தில் இருக்கின்ற பாதையின் பிரச்சினை என்னவென்றால் ஆகக் குறைந்தது 2 ½ மில்லியன் தேவைப்படும். அதை செய்யக்கூடிய வசதிகள் எம்மிடம் தற்போது இல்லை.

## தீர்மானம் - 04/46/13

விளாவடி வீதி அபிவிருத்திக்கு தடையாக இருக்கும் எல்லைப் பிரச்சினைக்கு தீர்வு கண்டு அப் பாதையை பிரதேச சபைக்கு கையளிக்குமாறு பிரதேச செயலாளரை வேண்டிக் கொள்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, முழுமையாக இல்லாவிட்டாலும் முதற்கட்டமாக பாடசாலைக்கு செல்கின்ற சேதம் அடைந்திருக்கின்ற பாதையை சீர்திருத்த வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதை செய்வதற்கும் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் தேவைப்படும். ஆனால் நாம் முயற்சி ஒன்று எடுப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பொது விளையாட்டு மைதானத்திலே வெளியூர்களில் இருந்தும் விளையாட்டுக் கழகங்கள் வந்து விளையாடுகின்ற போது அவர்களுடைய இயற்கை உபாதைகளை கழிப்பதற்காக மலசலகூடம் இல்லாத குறை மிக நீண்ட காலமாக இருந்தது வந்து கொண்டிருக்கின்றது. அவர்கள் பக்கத்து வீடுகளுக்குள் இருக்கின்ற மலசலகூடத்தைதான் பாவிக்கின்றார்கள். இதனை அறிந்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் முஷர்ரப் அவர்களின் நிதி ஒதுக்கீட்டிலே ஒரு இலட்சம் ரூபா மலசலகூடத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. மலசல கூடத்திற்குரிய மின்சார வசதியையும், நீர் வசதியையும் இந்த சபையினால் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று தயவாக கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் பராமரிப்பு என்றவுடன் ஒரு ஆளணி தேவைப்படும். மின்சாரம் ஏற்கனவே ஒரு இணைப்பு இருக்கின்றது. நமக்கு இருக்கின்ற பிரச்சினை ஆளணி. இந்த பொருளாதார நெருக்கடியினால் பல சுகாதார ஊழியர்கள் ஒவ்வொருவராக இல்லாமல் ஆகின்றார்கள். அரசாங்கம் மீளளிப்பதற்கும் தயார் இல்லை. நமது ஆளணியை கூட்டாமல் எடுப்பதனால் நமக்குத்தான் சுமை. காவலாளி ஆளணி இனிமேல் வராது. காவலாளி இல்லாமலும்

செய்ய இயலாது. சில நேரம் முடிவு எடுக்க வேண்டி வரும் காவலாளியாக இருக்கின்ற தற்காலிக ஊழியர்கள் எல்லோரையும் ஏனைய வேலைகளுக்கு நியமித்து தனியாருக்கு கொடுக்க வேண்டியதாகவும் வரலாம். சம்பளச் சுமை என்பது நிதியை இறுக்கமாக வைத்திருந்ததனால்தான் இவ்வளவு காலமும் தலை நிமிர்ந்து நிற்கின்றோம்.

## தீர்மானம் - 04/46/14

சம்மாந்துறை மட்டக்களப்புத்தரவை - 02 இல் உள்ள பொது மைதானத்தில் மலசலகூடம், புதிதாக நீர் இணைப்பு பெற்றுக் கொடுப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம்.மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எம்முடைய சபை முடிவுறும் காலத்தில் எங்களுடைய கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் எங்களது ஊருக்கும் சபைக்கும் பெருமையை தேடித்தந்ததற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அடுத்ததாக பாதைகள் வர்த்தமானியில் பிரசுரிப்பது சம்மந்தமாக எல்லோரும் சேர்ந்து முடிவு எடுப்பது என்று கூறினோம். அது பிற்போடப்பட்டுள்ளது. அதே மாதிரி கிராம சேவகர் பிரிவு சம்மந்தமான அபிப்பிராயங்களை கௌரவ உறுப்பினர்களிடம் கேட்கத் தொடங்கினால் காலம் கடந்துவிடும். இன்றய தினமே உங்களுடைய கருத்து என்ன என்பதை இந்த இடத்தில் பிரசுரிக்கப்பட்டால் நாங்கள் எல்லோரும் ஏகமனதான ஒரு தீர்மானத்தை எடுக்கலாம். சில நேரம் சபை முடிவடைந்தால் பிற்போடப்படுகின்ற விடயங்கள் எதுவும் நடைபெறாத சூழல் ஏற்படும். சபைக் காலத்திற்குள் அதற்குரிய தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

அத்தோடு 20 வீட்டு வீதி என்ற விடயத்தில் ஊருக்கு என்னுடைய ஏற்பாட்டில் 12 வீதிகள் வந்திருக்கின்றது. அதில் சுலையன்சேனை வீதி என்ற பெயரில் 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்குள் அந்த வீதியும் உள்வாங்கப்பட்டுள்ளது. மழை காலம் என்பதால் 02 மாதம் செல்லும். அதனையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பாதைகளுக்கு பெயரிடுதல் சம்மந்தமாக உங்களது முன்மொழிவுகள் எல்லாம் பதியப்பட்டுள்ளது. அடுத்த கிழமையில் ஒரு நாளைக்கு பொது பிரதிநிதிகள், நம்பிக்கையாளர் சபை, மஜ்லிஸ் அஷ்ஷூறா, நிபுணத்துவம் உள்ளவர்களை அழைத்து ஒரு அமர்வு ஏற்பாடு செய்து டிசம்பர் மாத முடிவுக்குள் அதை அமைச்சுக்கு அனுப்புவதற்கு முயற்சி எடுப்போம். கிராம சேவகர் பிரிவுகள் நான் உங்களுக்கு வாசிப்பதற்கு தயார்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல்.அஸ்பர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதை வாசித்து எல்லோரும் சரி என்று சொன்னால் ஏற்றுக் கொள்ளலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதை நான் மறுக்கின்றேன். இதன் பாரதூரம் தெரியாமல் செய்தால் அடுத்த சந்ததி நமக்கு ஏசும். வட்டாரப் பிரிவிலே பல குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றது. ஆகவே தனிப்பட்ட ரீதியான ஆலோசனைகளை அனுப்ப வேண்டிய இடத்திற்கு அனுப்புங்கள். சபை என்று வருகின்ற போது சகலரும் வாசிக்க வேண்டும். இது என்ன என்று தெரியாமல் சொல்ல சொல்ல எழுதுகின்ற விடயம் அல்ல.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ தவிசாளராக அல்லாமல் கௌரவ உறுப்பினராக அதை சமர்ப்பிக்கலாம்தானே.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் உங்களிடம் கேட்டதை நீங்கள் ஒருவரும் செய்யவில்லை. நான் எனது தனிப்பட்ட முறையில் ஒரு குறிப்பு வைத்திருக்கின்றேன். அதை நான் உங்களோடு கலந்தாலோசிக்க தயார். சபைக்கு சமர்ப்பிக்க வேண்டியதை உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்க நான் தயார் இல்லை. சபையின் தீர்மானம் கலந்தாலோசித்து ஒரு தீர்மானமாகத்தான் அனுப்ப வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தனிப்பட்ட தீர்மானங்களை சம்மாந்துறை பிரஜை என்ற அடிப்படையில் அனுப்பி இருக்கின்றோம். இது தனி ஒருவரால் எடுக்கின்ற முடிவு அல்ல. நாங்கள் எங்களது முயற்சியில் பல துறைகளையும் சேர்ந்தவர்களை அழைத்து அவர்களிடமும் கதைத்து கால அவகாசம் கொடுத்து அவர்களின் ஆலோசனைகளையும் எடுத்து எழுத்து மூலமாக சமர்ப்பித்திருக்கின்றோம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உங்களது கூற்றின் படி இந்த சபையோடு சபை முடியுமாக இருந்தால் இதற்கு பின்னர் சபையினுடைய தீர்மானமாக இந்த சபையினால் இவ்வாறான முன்மொழிவுகளை வைக்க முடியாது. இன்று நீங்கள் தயாரித்திருக்கின்ற அல்லது உங்களது சிந்தனைக்கு ஏற்றவாறு செய்திருக்கின்ற விடயங்களை கூறுங்கள். இதை இவ்வாறு செய்யலாமா, அல்லது எந்த கிராம சேவகர் பிரிவை எதனோடு சேர்க்கலாம், எதை பிரிக்கலாம் என்கின்ற அறிவுரையை கூறுங்கள். நாங்கள் இன்று 19 மக்கள் பிரதிநிதிகள் சமூகமளித்திருக்கின்றோம். ஏறத்தாள கூடுதலான அமர்வுகளுக்கு இவ்வாறு சமூகமளிப்பதில்லை. இன்று நாங்கள் இந்த சபையிலே ஏற்றுக் கொள்ளக்கூடியதை ஏற்றுக் கொள்வோம். மாற்ற வேண்டியதை மாற்றுவோம் என்ற தீர்மானத்திற்கு வர வேண்டும். ஏனென்றால் அடுத்த மாதம் சபை அமர்வு நடைபெறுமா? இல்லையா என்பது கேள்விக்குறி.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கையில் இருப்பதை தருவதற்கு ஏன் பயப்படுகின்றீர்கள்?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் அவர்களே, நான் ஒன்றுக்கும் பயப்பட்டவன் இல்லை. நான் அதை உத்தியோகபூர்வமாக சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நான் விரும்பவில்லை. விசேட அமர்வு வைத்து ஒவ்வொரு குறிச்சிகளின் தகவல்கள் எல்லாம் தந்திருக்கின்றேன். அதை எப்படி செய்யலாம் என்ற ஒரு கருத்தை நான் உங்களுக்கு முன்வைக்கலாம். அதற்கு நீங்கள் விரும்பிய மாதிரி அதில் மாற்றங்களை செய்துவிட்டு பின்னர் ஒன்றாக கூடி இப்படி செய்வோம் என்றால் சபை தீர்மானம் பெரும்பான்மை முடிவோடுதான் செல்லும்.

**கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கிராம உத்தியோகத்தர் பிரிவு பிரிப்பது என்பது ஒரு முக்கியமான விடயம். 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரிக்கப்படும் போது விவசாயப் போதனாசிரியர்கள் மற்றும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்களை உள்வாங்கியதாக அந்த பிரிவுகள் பிரிக்கப்பட்டது. அவ்வாறு பிரிக்கப்படும் போது மல்லிகைதீவை ஒரு பிரிவூாகவும், மல்காம்பிட்டியை ஒரு பிரிவாகவும் பிரித்து, இருக்கின்ற ஆளணிகளை நிரப்புவதற்காக அவ்வாறு செய்துவிட்டார்கள். ஆனால் ஜே புளக் பகுதியை பார்த்தால் அங்கு 900 குடும்பங்கள் இருக்கின்றது. மல்லிகைதீவு 65 குடும்பம், மல்காம்பிட்டி 04 குடும்பம். ஆனால் நிர்வாக ரீதியாக நிதி ஒதுக்கீடு செய்யும் போது சமனான நிதிகள்தான் வந்து சேரும். ஆகவே அதனால் மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். இந்த விடயத்தில் நாங்கள் இந்த ஊர் பிரதிநிதிகள் என்ற வகையில் மிகவும் உண்ணிப்பாக இந்த வேலையை செய்ய வேண்டும். அந்த வகையில் சம்மாந்துறையிலே உள்ள முஸ்லிம் கிராம உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றவர்கள் இருக்கின்றார்கள் அவர்களை உள்வாங்கி இந்தப் பிரிவை உங்களது தலைமையில் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என நான் எனது தனிப்பட்ட கருத்தை தெரிவித்துக் கொள்கின்றேன். அவசரப்பட்டு இதை செய்யக்கூடாது. இதனால் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது சபையின் கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் பெருமையை தேடித் தந்ததற்காக அவர்களுக்கு பாராட்டை தெரிவிப்பதோடு, எங்களுடைய சபையின் காலகட்டத்தில் உள்ள 20 உறுப்பினர்களில் 99% உறுப்பினர்கள் என்னோடு மிகவும் அன்பாகவும், அந்நியொன்னியமாகவும் பழகி இருக்கின்றார்கள். அந்த வகையிலே இந்த சபையை ஒரு முன்மாதிரியான சபையாக நினைக்கின்றேன். ஏனைய சபைகளை பார்த்தால் சபையின் தவிசாளரை அடிக்கடி மாற்றுவது, கட்சி மாறுவது போன்ற பல விடயங்கள் நடக்கின்ற சந்தர்ப்பத்திலே எமது சபை கௌரவமாகவும், முன்மாதிரியாகவும் நடந்ததையிட்டு நான் பெருமைப்படுகின்றேன். அதற்கு நீங்கள் எல்லோரும் காரணமாக இருந்தாலும் எங்களுடைய கௌரவ தவிசாளர் அவர்களும் ஒரு காரணம். அதே போன்று திறமையான ஒரு செயலாளர், BA பட்டதாரி, திறமையான அனுபவம் வாய்ந்தவர். எங்களுடைய சபையில் இருப்பது பெருமையான விடயம் என்பதை கூறிக் கொண்டு, நீங்கள் இவ்வளவு காலமும் என்னோடு அந்நியொன்னியமாகவும், சகோதர மனப்பாங்குடனும் பழகியதையிட்டு நான் உங்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்து இந்த சபையின் ஊழியர்களுக்கும் நன்றியை தெரிவிக்க வேண்டும். எங்களுடைய சபையின் ஊழியர்கள் மிகவும் கண்ணியமானவர்கள். அதற்கு காரணம் கௌரவ தவிசாளர் அவர்களாகவும் இருக்கலாம் என்று நினைக்கின்றேன். மொத்தமாக சகலருக்கும் நன்றியை தெரிவித்து எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சபைக்கூட்டம் இறுதிக் கூட்டம் என்று கூறப்பட்டு இருப்பதை நானும் உறுதிப்படுத்தலாம் என நினைக்கின்றேன். சபைக்கு நான் வருவேன் என்று கனவு காணவில்லை. எனது வருகை எவ்வாறு என்பது கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களுக்கும், கௌரவ உறுப்பினர் சஹீல் அவர்களுக்கும் தெரியும். எவ்வாறான போராட்டங்களுக்கு மத்தியில் இங்கு வந்தேன் என்பது. இவ்வாறான அடிப்படை அடித்தளம் அரசியல் ரீதியாக எனக்கு இருக்கின்ற இறுக்கமான விகிதாசார அடிப்படையில் போடப்பட்ட கலவையின் மூலம்தான் நான் இன்று சபைக்கு வந்து இருக்க வேண்டிய காலம் ஏற்பட்டது. அதனடிப்படையில் பிரதேச சபையைப் பற்றி எந்தவொரு முன்னறிவும் இல்லாத நிலையில் இங்கு வந்திருந்தேன். கௌரவ தவிசாளர் அவர்களின் அரசியல் அனுபவத்தின் மூலமாக இந்த சபையில் பல ஒழுக்க நெறிகளையும் செயற்பாடுகளையும் அறிந்து கொண்டேன். அதற்கு நான் இறைவனுக்கு நன்றி கூறுவதோடு,

அத்தோடு இந்த சபையின் செயலாளராக இருப்பவர் மிகவும் நெருங்கிய நண்பர். பாடசாலையில் ஒரே வகுப்பில் படித்தவர்கள். சபை என்ற அடிப்படையில் அவருடனும் இங்கு கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், எமது சபையின் பேச்சுக்களை தொகுக்கும் சகோதரி உட்பட அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். ஏதும் தவறுகள் பிழைகள் ஏற்பட்டிருந்தால் பெருமனம் கொண்டு அதை மன்னித்துக் ொகள்ள வேண்டும். அத்தோடு சக கௌரவ உறுப்பினர்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கின்றேன். கௌரவ தவிசாளர் அவர்கள் இன்றய உரையில் அரசாங்கத்திற்கு பிரேரணை சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறியிருந்தீர்கள் நல்ல விடயம். இந்த சபையின் தீர்மானம் எந்தளவுக்கு தாக்கத்தை செலுத்தும் என்பதை கௌரவ தவிசாளர் அவர்கள் அறிந்திருப்பார்கள் என நினைக்கின்றேன்.

இதை விட இந்த சமூகத்தை வழிநடாத்திச் செல்கின்ற எமது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்கள் அந்த பாராளுமன்றத்தின் மூலம் செய்கின்ற செயற்பாடுதான் இதற்கு ஆக்கபூர்வமான முடிவுகளை கொண்டு வரும் என்பது எனது கருத்தாக இருக்கின்றது. அந்த அடிப்படையில் எமது பாராளுமன்ற உறுப்பினர்களின் குறைபாடுகள் கௌரவ சாணக்கியன் பாராளுமன்ற உறுப்பினர் மூலம் வெளிப்படுத்தி இந்த சமூகத்திற்கு காட்டப்பட்டிருக்கின்றது என்பது எனது வேதனையான கருத்தையும் இவ்விடத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு நான் இந்த பிரதேச சபைக்கு வந்த காலம் நல்லாட்சிக்கான அரசாங்கத்தின் காலமாக இருந்த படியினால் இன்று எமது பிரதேச சபையின் பெண்கள் கௌரவ உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு அந்த நல்லாட்சி அரசாங்கமும் வழிநடாத்திய அரசாங்கத்திற்கு பெண் உறுப்பினர்கள் எப்போதும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை நான் இவ்விடத்தில் அழுத்தமாக கூறிக் கொள்கின்றேன்.

இவ்வளவு காலமும் இந்த சபை நடவடிக்கைகளில் கலந்து கொண்டு செயற்பட்டு இனிவரும் காலங்களில் எமது கௌரவ உறுப்பினர்கள் யார் வருவார்கள், யார் வரமாட்டார்கள் என்று தெரியாது. இருந்தாலும் சபைக்கு யாரும் எந்த தேவையின் பொருட்டு வருகின்ற போதும் எங்களது

செயலாளர் உட்பட அனைவரும் பெருமனதோடு உறுப்பினர்களை வரவேற்று அவர்களது தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று தயவாக வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று 46வது அமர்வில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். இத்தோடு இந்த அமர்வு நிறைவு பெறும் என்று கூறியதற்கமைவாக இந்த 04 வருடங்களாக இந்த பயணத்தின் போது என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க இந்த இறுதி நேரத்தில் முன்மொழிகின்றேன். உண்மையிலே உறுப்பினராக தெரிவு செய்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். நான் தமிழ் பெண்ணாக இருந்தாலும் என்னை முஸ்லிம் காங்கிரசிற்குள் இணைத்து எனக்கும் எனது மக்களுக்கும் சகல விதமான சேவைகளையும் வழங்கிய என்னுடைய கட்சிக்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொண்டு, இந்த சபையானது இன, மத, மொழிகளுக்கு அப்பால் நாங்கள் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்ற ரீதியிலே நடந்து முடிந்திருக்கின்றது. எங்களுடைய பிரதேசம் ஒரு பெரும்பான்மைக்குள் சிறுபான்மையாக இருந்தாலும் எங்களை சிறுபான்மையாக யாரும் கணிக்கவில்லை. எங்களுடைய பகுதியில் இருக்கின்ற மக்களினுடைய வருமானங்கள் எதுவும் இன்றி சம்மாந்துறை மக்களின் வருமானத்தை வைத்தே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற உண்மையை இந்த தருணத்தில் தெரிவிக்க வேண்டும். ஏனெனில் புரியாத சிலருக்கு வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றேன். சம்மாந்துறை சபை மக்களை புறந்தள்ளிக் கொண்டே இருக்கின்றது என்று பலர் கூறிக்கொண்டு இருக்கின்றார்கள். அவர்களுக்கு நான் எதிர் கருத்தையே தெரிவித்துக் கொண்டிருக்கின்றேன்.

இந்த சபையும் எங்களது நகர பிதாவும் இங்கு கடமை புரிகின்ற ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் உட்பட எங்களது செயலாளர் அவர்களும் கூட எந்த விதமான மனகஸ்டங்களையும் எங்களுக்கு தரவில்லை. அந்த அடிப்படையிலே நாங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இத்தனை காலமும் பயணித்ததை இட்டு பெருமை அடைகின்றேன். மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் அதிகமான சேவைகளை செய்ய வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றேன். இருந்தும் பெண் என்ற ரீதியில் எங்களுக்கு சிங்கப் பெண்ணாக நின்று இந்த விருதை பெற்றுத்தந்த கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களை வாழ்த்துகின்றேன். உண்மையிலே இத்தனை வருட காலங்களாக இல்லாததை செய்திருக்கின்றார். இதற்கு உதவியாக இருந்த எங்களுடைய கௌரவ உறுப்பினர்களுக்கும், கௌரவ தவிசாளர் அவர்களுக்கும் நன்றி கூற வேண்டும். பெண் என்ற ரீதியில் எங்களை எந்தவிதத்திலும் தரம் குறைத்து பார்த்ததில்லை. நாங்கள் கேட்கின்ற எதையும் தரக்கூடிய நிலையில்தான் எங்களுடைய தவிசாளர் இருக்கின்றார். மற்றய சபைகளை பார்க்கின்ற போது அங்கே பல குறைபாடுகளை கூறுவார்கள். ஆனால் நாங்கள் சந்தோசமாக சபையின் கௌரவ உறுப்பினர்களையும், எங்களுடைய தவிசாளர் அவர்களையும், சபை நிர்வாகத்தை பற்றியும் சொல்வோம். அந்த வகையில் நான் பெருமை அடைகின்றேன் சம்மாந்துறை சபையை நினைத்து என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்ததாக நாங்கள் தொடர்ச்சியாக மல்லிகைதீவு பிரதேசத்திற்கு நீர் வழங்கிக் கொண்டிருக்கின்றோம். அங்கு சில பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. 84 நீர் தாங்கிகளை வழங்கி இருக்கின்றோம். ஆரம்பத்தில் 09 தாங்கிகள் வழங்கி ஒரு பிரச்சினையும் இல்லாமல் நீர் வழங்கி இருந்தோம். இப்போது 84 தாங்கிகளுக்கும் நீர் வழங்குவதில் பல சிக்கல்கள் இருக்கின்றது. அந்த அடிப்படையில் அங்கு இருக்கின்ற மக்கள் நீரை மிகவும் மோசமான நிலையில் பாவிக்கின்றார்கள். அந்த மக்களுக்கு தொடர்ச்சியாக நீரை வழங்குவதற்கும் எங்களது சபையில் இருந்து சில ஊக்கங்களை கொடுக்க வேண்டும். அவர்களிடம் இருந்து சிறு வரிப்பணமாவது அறவிட்டீர்கள் என்றால் நீரை பக்குவமாக பாவிக்க முடியும். இலவசமாக கிடைக்கின்ற நீர் என்றபடியினால் மோசமான நிலையில் பாவிக்கின்றார்கள். எங்களுடைய சபையிலும் அதற்கான பணம் அதிகமாக செலவிடப்படுவதனால் வருமானத்தை ஈட்டிக் கொள்ளவும் முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொது நூலகத்தினுடைய எந்தவொரு செயற்பாடும் நடைபெறவில்லை. அதை ஒரு திறப்பு விழா செய்து கையளிக்கவில்லை. அதையும் இந்த நாட்களுக்குள் செய்து முடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மல்லிகைதீவு விடயம் ஒரு கிழமைக்கு 18000L வழங்குகின்றோம். முதல் மொத்தமாக கொடுத்த படியினால் பிரச்சினை இல்லை. 84 உம் பாவனையில் இருந்தால் ஒரு கிழமைக்கு ஒரு தாங்கிக்கு 200L கொடுக்கலாம். அதற்கு மேற்பட்டால் ஒரு கட்டணம் அறவிட வேண்டும். அதற்கு இன்னும் முன்மொழிவுகள் வரவில்லை. மல்லிகைதீவை பொருத்தவரையில் மிகவும் அச்சத்தோடுதான் பயணிப்பது. இவ்வளவு செய்தும் மல்லிகைதீவு மக்கள் எந்த பொது இடத்திலும் கட்டணம் இல்லாமல் நீர் கொடுக்கின்றோம் என்று சொல்வதில்லை. இது பெரிய ஒரு மனக்குறை. நீர் கொடுக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை. நீர் வழங்கல் சபையும், பிரதேச செயலாளரும் பார்க்க வேண்டும். ஆனால் அந்த மக்கள் கஸ்டப்படுகின்றார்கள் என்று கிட்டத்தட்ட 08 வருடமாக செய்து வருகின்றோம். தற்போதும் அதில் குறைதான் கூறுகின்றார்களே தவிர நீர் வருகின்றது என்று இல்லை. அவர்கள் மேலதிகமாக பாவிக்கின்ற நீருக்கு கட்டணம் அறவிட வேண்டும்.

## தீர்மானம் - 04/46/15
மல்லிகைதீவு மக்களுக்கு இலவசமாக மாதாந்தம் வழங்கப்படும் நீருக்கு மேலாக தேவைப்படுபவர்களுக்கு உரிய கட்டணத்தை அறவிட்டு விநியோகிப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம்.இன்பவதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |

பிரேரணை சபையில் சமூகமளித்திருந்த கௌரவ உறுப்பினர்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நூலகம் தொடர்பாக நாம் அதை புதிதாக கட்டவில்லை. இருந்ததை திருத்தி நூலகத்தை அங்கு இடமாற்றி இருக்கின்றோம். அதற்கு ஒரு வைபவம் வைக்க வேண்டும் என்று இருந்தது. ஆனால் கொவிட் 19 இனால் தடைபட்டது. அதற்கு ஒரு வைபவமாக வைக்க வேண்டும் என்றால் இந்த மாதத்திற்குள் செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இங்கு இருக்கின்ற கௌரவ தவிசாளர் உட்பட கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் எனக்கு பாராட்டு தெரிவித்தீர்கள். பாராட்டுக்கு முதல் காரணம் நீங்கள் அனைவரும்தான். இந்தப் பாராட்டு உங்களையும் சாரும். கௌரவ தவிசாளர் அவர்களின் ஆலோசனைக்கு இணங்க இத் திட்டத்தை செய்ய இந்த சபைதான் எனக்கு ஊக்கமளித்தது. அங்கு சென்று பார்த்து மாணவர்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்கு என்ன என்ன வேண்டும் என்பதை அறிய முதல் குழு ஒன்று போட்டதற்கு இணங்கத்தான் மாணவர்களுக்குரிய தேவைகளை என்னால் அறியமுடிந்தது. இது சம்மாந்துறை மண்ணுக்கும் இந்த பிரதேச சபைக்கும் ஒரு பாராட்டாகத்தான் நான் நினைக்கின்றேன். அடுத்த விடயம் இங்கு 06 பெண்கள் இந்த சபையில் இருக்கின்றார்கள். எங்களுக்கு எந்த கருத்து முரண்பாடுகளும் இல்லை. ஆனால் நாங்கள் நன்றி தெரிவிக்க வேண்டும் என்றால் அரசாங்கத்திற்கு முதல் நன்றி தெரிவிக்க வேண்டும்.

25% பெண்களுக்கு என்ற பங்கு வந்ததனால்தான் நாங்கள் இந்த சபைக்கு வந்திருக்கின்றோம். நாங்கள் இந்த சபைக்கு வரும் போது என்னை மட்டும் எடுத்துக் கொண்டால் இந்த சபைக்கு வரும் போது இந்த சபையில் ஒரு சட்டம் இருக்கின்றது. இந்த சபையில் எவ்வாறு நடந்து கொள்வது எந்த எந்த விடயங்களை செய்ய வேண்டும் என்ற ஓர் அனுபவம் இல்லாமல் தான் இந்த சபைக்கு காலடி எடுத்து வைத்தோம். ஆனால் இந்த சபைக்கு வந்ததற்கு பின்னர்தான் எனக்கு ஒரு துணிவு ஒன்று அதிகமாக ஏற்பட்டது. எனது பெற்றார், எனது கணவன் எனக்கு வழமையாக துணிவு தந்திருந்தும் கூட எனக்கு இந்த சபை கௌரவ தவிசாளர் மற்றும் இந்த இடத்தில் செயலாளருக்கும் நன்றி கூற விரும்புகின்றேன். பல சமயங்களில் எனக்கு ஆலோசனைகள் வழங்கினார். கௌரவ உறுப்பினராக வந்ததற்கு பின்னர் தற்துணிவு அதிகம். பெண்கள் அனைவருக்கும் தற்துணிவு அதிகம். ஆனால் இவ்வாறான வேலைகளை முன்னெடுத்து செல்வதற்கு எங்களது கௌரவ தவிசாளர், கௌரவ ஆண் உறுப்பினர்களும்தான் காரணம். பல சபைகளில் பெண்களுடைய கதைகள் எடுபடாமலும்

அவர்களுக்கு மதிப்பு இல்லை என்றுதான் நாங்கள் பயிற்சிப் பட்டறைகளில் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் இவ்வாறான விடயங்கள் இங்கு தெரியவே இல்லை. பெண்கள் என்பதற்கு கம்பீரமான பேச்சுதான் தந்திருக்கின்றார்களே தவிர எங்களுக்கு இழிவான பெயர் ஒரு காலமும் தரவில்லை.

ஆனால் எனக்கு பாதிப்புகள் மன வேதனைகள் இந்த சபையில் வந்திருக்கின்றது. அதை நான் குறிப்பிட்ட காலம் எனது உள்ளத்தில்தான் இருந்தது. ஆனால் இன்று அதை மறந்துவிட்டேன் என்பதையும் உங்களிடம் கூற விரும்புகின்றேன். மற்றும் நாங்கள் இந்த சபைக்கு கூற விரும்புவது பெண்கள் அரசியல் பயணத்திற்கு களம் இறங்கிய போது எங்களுக்கு சூட்டப்பட்ட பெயர் வேறு. நாங்கள் திறமையாக வேலை செய்து நாங்கள் மக்களிடம் பழகியதன் பின்பு எங்களுக்கு இருக்கின்ற பெயர் வேறு. அன்று எங்களை தூற்றியவர்கள் இன்று எங்களை நல்ல முறையில் பேசுகின்றார்கள். அதற்கு காரணம் எங்களை இந்த இடத்திற்கு முதல் கொண்டு வந்தது எங்களுடைய குடும்பம். எங்களுடைய கணவன், பிள்ளைகளின் உதவியோடுதான் நாங்கள் இங்கு களம் இறங்கினோம். அதன் பின் கௌரவ தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், செயலாளர், உத்தியோகத்தர்கள் அனைவரும் இந்த இடத்திற்கு பெருமை தேடிக் கொடுத்திருக்கின்றோம் என்று நினைக்கின்றேன்.

கிராம சேவகர் பிரிவு விடயத்தில் கௌரவ தவிசாளர் அவர்கள் கூறினார்கள் கிராம சேவகர் பிரிவு பிரிக்க வேண்டும் என்றால் அதிகமான சனத்தொகை இருக்கின்ற இடத்தில் அங்கு தேவைகள் குறைவு. உதாரணமாக சம்மாந்துறை – 07 எடுத்துக்கொண்டால் எங்களுடைய தேவை குறைவு. அதனால் வறுமைக் கோட்டின் கீழ் இருக்கின்ற மக்கள் குறைவு. எனவே மற்ற கிராம சேவகர் பிரிவுடன் இணைக்கலாம். மலையடிக்கிராமம், சென்னல்கிராமம் போன்ற இடங்களில் அதிகமாக பிரிக்கலாம் என்று கூறிய விடயம் எனக்கு ஒலிக்கின்றது. இவர்கள் அனுப்பிய தகவல்கள் திருப்பப்பட்டிருக்கின்றது. ஆகவே நாம் கௌரவ தவிசாளர் அவர்களின் அறிவை உணர்ந்து கொள்ள வேண்டும். கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கேட்டார்கள் கையில் தர வேண்டும் என்று, அதை கையேடாக தர வேண்டும் என்ற அவசியம் இல்லை. கௌரவ தவிசாளர் அவர்கள் அனுபவம் உள்ளவர், அறிவு வாய்ந்தவர் அவருடைய கருத்தை நாங்கள் உள்வாங்க வேண்டும். அதை எங்கள் மத்தியில் கூற வேண்டும் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் வெற்றிகரமாக இந்த திட்டத்தை செய்ததற்கு முக்கிய காரணம் கணவனின் அனுபவம். அவர் NGO க்களில் வேலை செய்து Project எழுதுவதில் சிறந்தவர். கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களின் சுறுசுறுப்பும், அவரது கனவரின் அனுபவமும் சேர்ந்து வந்ததனால்தான் இது நிறைவேறியது. ஒரு எம்பெசிக்கு முன்மொழிவு அனுப்புவது என்றால் என்ன என்ன விடயம் உள்வாங்கப்பட வேண்டும் என்பதில் இந்த ஊரில் பெயர் பெற்றவர் ஜனாப் சியாஸ் அவர்கள். இந்த கௌரவத்தை சபைக்கு தேடித்தந்ததில் அவருக்கும் பாரிய பங்கு உண்டு என்பதை கூறிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.குலமணி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, முன்னாள் 02 வருட காலமாக உப தவிசாளராகவும், 01 வருட காலமாக உறுப்பினராகவும் கடமையாற்றிய ஜெயச்சந்திரன் அவர்களால் விட்டுக்கொடுக்கப்பட்டு இந்த சபை அமர்வுக்கு என்னை அனுப்பி வைத்த அவருக்கும், இங்கு எனது மனம் சஞ்சலம் இல்லாமல் வழிநடாத்திய இச் சபைக்கும் கௌரவ தவிசாளர் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். என்னால் சபையில் முன்மொழியப்பட்ட திட்டங்களுக்கு சபையின் வளங்களைக் கொண்டு செய்து தந்தமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். பல வேலைகள் எனக்காக செய்து தந்திருக்கின்றீர்கள். இன்னும் வேலைகள் நடைபெற வேண்டும் என்று இருப்பதனால் அதனையும் நிவர்த்தி செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு,

வளத்தாப்பிட்டி கிராமத்திலே கிராம சேவர் பிரிவு என்பது முக்கியமான ஒரு பிரிவாக இருக்கின்றது. 2000 இற்கு மேற்பட்ட குடும்பங்களை கொண்ட கிராமமாகத்தான் இந்தக் கிராமம் அமைந்திருக்கின்றது. வட்டாரத்தில் பார்க்கும் போது 05 வட்டாரங்களாகவும், கிராம சேவகர் பிரிவை

பார்க்கும் போது 04 கிராமங்களையும் கொண்டு வளத்தாப்பிட்டி கிராமம் அமைந்திருக்கின்றது. அங்கு பல தேவைகள் இருப்பதனால் இந்தப் பிரிவு முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனென்றால் அதன் வரலாறு பற்றி கௌரவ தவிசாளர் அவர்களுக்கு நிறைய விடயங்கள் அறிந்த உண்மை. அதனை பிரிப்பது சம்மந்தமான முடிவுகள் மேற்கொள்ளும் போது முக்கியத்துவம் எடுக்க வேண்டும் என்று கேட்டு, இச் சபையில் எனக்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்கள் எல்லோரினது கருத்துக்களையும் உள்வாங்கியவனாக, உங்கள் சார்பிலும் இந்த ஊர் மக்கள் சார்பிலும் இவ்வளவு காலமும் நாம் இச் சபையில் எடுக்கும் முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு உறுதுணையாக இருந்த கௌரவ சபையின் செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட் அவர்களுக்கும், சகல உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும் நன்றி கூறி, இத்துடன் சபை அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

A.M.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை

.